3. தகவல் கோரல்

முன் அனுமதி பெறாமல் ஒரு பிரச்சினையை எழுப்புதல் (பேரவைப் பணிகளினின்றும் திரு. பி. வி. இராஜேந்திரன் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெற்றது உள்பட)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதுவுமே கொடுக்காமல் நிற்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) எதுவுமே கொடுக்காமல் திடீரென்று இங்கே வந்து எழுந்தால், நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவுமே என்னிடம் கொடுக்காமல் திடீரென்று எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடுகள்) பேரவைக்குள்ளே கேள்வி நேரம் முடிவதற்குச் சற்று நேரத்திற்கு முன்னர் வந்து, திரு. சுந்தரதாஸ் ஒரு பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டும் என்று கேட்டார். நான் அப்போதே, என்ன எழுப்புவதாக இருந்தாலும் என்னுடைய அறையிலே வந்து என்னிடத்திலே தெரிவிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) முன்னரே சொல்வது என்பது என்னுடைய அறையிலே வந்து சொல்வதுதான் (குறுக்கீடுகள்) நீங்கள் என்னுடைய அறையிலே வந்து தெரிவிப்பதுதான் அதற்குப் பொருள். என்னிடத்திலே முன்னரே அனுமதி பெறுவது என்று அதற்குத்தான் பொருள். (குறுக்கீடுகள்).

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியப் பிரச்சினை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியப் பிரச்சினை என்றால், அவ்வளவு முக்கியப் பிரச்சினையை தாங்கள் என்னுடைய அறையிலே வந்து கொடுத்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன். முக்கியப் பிரச்சினைகளை இங்கே பேசுவதற்குத்தான் என்னுடைய அறையிலே வந்து முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் என்பது. (குறுக்கீடு) முக்கியப் பிரச்சினைகளுக்குத்தான் அது; அவ்வளவு முக்கியப் பிரச்சினையாக இருந்தால் என்னுடைய அறையிலே வந்து சொல்லி இருப்பார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதற்குமேல் வேறு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, விதி முறைப்படி நடந்து கொள்ளுங்கள் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. பாராளுமன்ற முறையை அனுசரியுங்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராளுமன்ற முறையை அனுசரியுங்கள் என்றுதான் நான் உங்களையும் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

[1995 ஏப்ரல் 25

[பேரவைத் தலைவர்]

பாராளுமன்ற முறையை அனுசரியுங்கள் என்றுதான் நானும் சொல்கிறேன். பாராளுமன்ற முறை என்பது கேள்வி நேரம் முடிந்த பின்னர், ஏதாவது ஒரு பிரச்சினையை இங்கே எழுப்புவதாக இருந்தால் பேரவைத் தலைவர் அறையிலே வந்து முன்அனுமதி பெற வேண்டும். அதை அனுசரியுங்கள் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பத் தப்பாகவே போய்க் கொண்டு இருக்க வேண்டாம். பாராளுமன்ற முறையை அனுசரியுங்கள் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. என்னிடம் எந்த அனுமதியும் கேட்காமல் நீங்கள் எல்லோரும் எழுந்து நிற்பது சரியல்ல. (கூச்சல்-குழப்பம்) திரு. குமாரதாஸ், என்னுடைய எந்த அனுமதியும் பெறாமல்—உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினை என்று கருதுகிறேன்— நீங்கள் எழுந்து நிற்பது சரியல்ல. (கூச்சல்-குழப்பம்) உறுப்பினர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) பாராளுமன்ற முறையை அனுசரியுங்கள் என்று மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொல்கிறார். நான் அதைத்தான் திரும்ப உங்களுக்கும் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) இது அல்ல பாராளுமன்ற முறை. (கூச்சல்-குழப்பம்) இது அல்ல பாராளுமன்ற முறை. (கூச்சல்-குழப்பம்) இது பாராளுமன்ற முறை அல்ல. இது பாராளுமன்ற முறை அல்ல. உட்கார வேண்டும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்னிடம் எந்த அனுமதியும் கேட்கவில்லை. எனவே, நீங்கள் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) உறுப்பினர் பி. வி. இராஜேந்திரன் உட்கார வேண்டும்; திரு. ஞானசேகரன் உட்கார வேண்டும்.

திரு. குமாரதாஸ் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) உட்காரவில்லை என்று சொன்னால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும், உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்கார வேண்டும்; எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்னிடம் முன்அனுமதி பெறவில்லை; எனவே, இதை நான் அனுமதிக்கவில்லை; ஆகவே, நீங்கள் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) இது முறையல்ல. இங்கே ஒரு முறையைக் கடைப்பிடிக்கிறோம். ஆனால் நீங்கள் திரும்பத் திரும்ப தவறே செய்து கொண்டு இருப்பது என்கிற முடிவுக்குச் சென்று இருக்கிறீர்கள். (கூச்சல்-குழப்பம்) திரும்பத் திரும்ப தவறே செய்துகொண்டு இருப்பது, இந்தப் பேரவையை அவமதிப்பது, பேரவைத் தலைவரை அவமதிப்பது, சட்டமன்ற நடைமுறைகளை, விதிகளை அவமதிப்பது

என்பதைத் தொடர்ந்து செய்வது என்று முடிவு கட்டி இருக்கிறீர்கள் என்பதுதான் இதனுடைய பொருள். சட்ட அமைச்சர் அந்த விதிகளைச் சொல்லுவார்; நான் சொல்லிச் சொல்லி அலுத்தே போய்விட்டது. மாண்புமிகு சட்ட அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக நம்முடைய சட்டமன்ற பிசினஸ் ரூலிலே சொல்லப்பட்டு இருக்கிறது. In page 14 of the Legislative Assembly Rules, rule 87 (vi) specifically says: `shall not stand in the House when the Speaker is addressing the House.'

நீங்கள் பேசுகின்றபோது எந்த உறுப்பினரும் எழுந்து நின்று, இப்படிக் குறுக்கீடு செய்யக் கூடாது என்று மிகமிகத் தெளிவாக விதி இருக்கிறபோது, அவர்கள் இப்படிச் செய்வதின் மூலம் சட்டப் பேரவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிறார்களோ என்று அஞ்சுகிறேன். தயவுசெய்து விதியை அமல்செய்யுமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்).*

முற்பகல் 11.15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராளுமன்ற முறையைத்தான் சொன்னேன். பாராளுமன்ற முறைகளில்—பேரவைத் தலைவர் இங்கே, அங்கே நாடாளுமன்றத் தலைவர். மக்கள் அவைத் தலைவர் அல்லது மாநிலங்களவைத் தலைவர் அவர்களிடத்தில், பேரவை கூடுவதற்கு முன்னரேயே, நாங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று அனுமதி கோரிவிட்டுத்தான் அவையில் வந்து எழுப்புவார்கள். நீங்கள் அந்த முறையைப் பின்பற்றவில்லை என்றுதான் நான் சொல்கிறேன். பேரவை விதிகளைக் கடைபிடியுங்கள் *(கூச்சல்-குழப்பம்)* இந்தப் பேரவையினுடைய இறையாண்மையை — *(கூச்சல்-குழப்பம்)* அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இராஜேந்திரன், நீங்கள் சத்தமிட்டுப் பேசுகின்ற காரணத்தினாலே நடவடிக்கைக்கு உள்ளாவீர்கள், சொல்லிவிட்டேன். ஜீரோ அவரில் எழுப்புவதற்குத்தான் நான் அந்த முறையை உங்களுக்குச் சொன்னேன். *(கூச்சல் குழப்பம்).* இராஜேந்திரன், உங்களுடைய இருக்கையைவிட்டு இவ்வளவு தள்ளி வந்தால் நடவடிக்கைக்கு ஆளாக வேண்டிவரும். முறைக்கேடாக உங்களுடைய இருக்கையைவிட்டு வெளியே வருவதே சரி அல்ல. *(கூச்சல்-குழப்பம்)* இராஜேந்திரன் இது முறை அல்ல *(கூச்சல்-குழப்பம்)* இராஜேந்தின் உட்கார வேண்டும். *(கூச்சல்-குழப்பம்)*

(திரு. பி. வி. இராஜேந்திரன் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு இடதுபுறம் மிக அருகில் வந்து கீழே உட்கார்ந்துகொண்டு ஏதோ பேசினார்.)

இராஜேந்திரன் முறைகேடாக நடந்துகொள்கிறீர்கள். முறை தவறி நடக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* முறை தவறி நடக்கிற இராஜேந்திரன் அவையை விட்டு வெளியேறவேண்டும். பேரவையை விட்டு வெளியேற வேண்டும். *(கூச்சல் குழப்பம்)* என்னுடைய இருக்கையருகே வந்தமர்ந்து இவ்வாறு பேசுவது முறையல்ல. அவையை விட்டு வெளியேற வேண்டும். *(கூச்சல் குழப்பம்).* திரு. பி. வி. இராஜேந்திரனை அவையை விட்டு அப்புறப்படுத்த மார்ஷலுக்கு உத்தரவிடுகிறேன்.

(திரு. பி. வி. இராஜேந்திரன் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பி. வி. இராஜேந்திரன் பேரவை விதி 120-ன்கீழ் இரண்டாவது முறை அவையிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் பேரவைக் கூட்டத்தின் எஞ்சிய காலத்திற்குப் பேரவையிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார். *(கூச்சல் குழப்பம்)* பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்கார வேண்டும். என்னிடம் அனுமதி கேட்கவில்லை. என்னிடம் அனுமதி கேட்காது, எந்த பிரச்சினையாக இருந்தாலும் எழுப்ப முடியாது. என்னிடம் அனுமதி கேட்க மாட்டீர்கள், என்னை மதிக்க மாட்டீர்கள், விதிகளைத் தூக்கி எறியுங்கள் என்று பேசினீர்கள். மிகக் கடுமையான முறையில் ஒரு உறுப்பினர் நடந்துகொள்வார், இதையெல்லாம் பேரவை சகித்துக்கொண்டு இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள். தொடர்ந்து இந்தப் பேரவைக்கு ஆண்டாண்டுக் காலமாக பல்வேறு பெருமக்கள் வாங்கிக் கொடுத்த அரிய இறையாண்மையை நீங்கள் திட்டமிட்டு கொலை செய்ய முயற்சிக்கிறீர்கள் என்று கூடச் சொல்வேன். *(கூச்சல் குழப்பம்)* சட்டமன்ற இறையாண்மைக்காக, பாராளுமன்ற இறையாண்மைக்காக குரல் கொடுத்த டாக்டர் அம்பேத்கார், பண்டித நேரு போன்றவர்களுடைய ஆத்மா உங்களை மன்னிக்காது. *(குறுக்கீடுகள்)* இந்தப் பேரவையினுடைய இறையாண்மையைக் கேள்வி கேட்கிற அளவுக்கு வந்துவிட்ட உங்களை டாக்டர் அம்பேத்கார் ஆத்மா மன்னிக்காது, பண்டித நேருவினுடைய ஆத்மா மன்னிக்காது, அவர்கள் எல்லாம் பெற்றுத் தந்த இந்த சட்டவிதிகளை இங்கே பின்பற்றக்கூடாது என்று நீங்கள் செய்கிறீர்கள், அந்த பெருமக்களுடைய ஆத்மா உங்களை மன்னிக்காது. *(குறுக்கீடுகள்)* ஞானசேகரன் உட்கார வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* நான் உங்களை உட்கார வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். குமாரதாஸ் உட்காருகிறீர்களா, நடவடிக்கை

எடுக்கவா? (குறுக்கீடுகள்) பேரவையில் நான் சொல்லிவிட்டேன். திரு. சுந்தரதாஸ் என்னிடத்திலே இங்கே கேள்வி நேரம் முடிவதற்கு சற்று நேரத்திற்கு முன்னர் எங்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார். அப்போதே சொல்லிவிட்டேன். என்னுடைய அறையிலே வந்து கேட்டிருந்தால் நான் அதைப் பரிசீலித்திருப்பேன். (குறுக்கீடுகள்) என்னுடைய அறையிலே வந்து கேட்டிருக்க வேண்டும். அப்படிக் கேட்காமல், இங்கே வந்து கேட்பதை அனுமதிக்க முடியாது. பேரவையின் அடுத்த அலுவல்களை நான் எடுத்துக்கொள்ள வேண்டிவரும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11.20

பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிவிப்பினை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். அந்த அறிவிப்பினை இப்போது பேரவைக்கு வெளியிட அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்களுடைய கோரிக்கையை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். இந்த அவையினுடைய இறையாண்மையை நீங்கள் கேலிக் கூத்தாக்குவதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஞானசேகரன், நான் அனுமதிக்கவில்லை என்கின்றபோது அவையினுடைய ஏனைய அலுவல்களை எடுத்துக்கொள்ள நீங்கள் இடையூறு செய்தல் கூடாது. (குறுக்கீடுகள்) இடையூறு செய்தல் கூடாது. இது முறையல்ல (குறுக்கீடுகள்) கோரிக்கைகளை எப்படி வேண்டுமென்றாலும் வலியுறுத்த முடியாது.

கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கு சில வரைமுறைகள் இருக்கின்றன. அந்த வரைமுறைகளைப் பின்பற்றுங்கள் என்றுதான் சொன்னேன். எல்லா உறுப்பினர்களும் பேரவை கூடுவதற்கு முன்னர் இங்கே வந்து எவ்வளவோ பிரச்சினைகளை என்னுடைய அறையிலே கேட்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து இங்கே எடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே, இது முறையல்ல. (குறுக்கீடுகள்) என்னிடம் அனுமதி கேட்காமல் எதை அனுமதிக்கச் சொல்கிறீர்கள்? முறைகேட்டை அனுமதிக்கச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை. ஞானசேகரன் போன்றவர்களின் முறைகேடான நடவடிக்கைகளை அனுமதிக்கச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை. முறைகேட்டை அனுமதிக்கச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்பது அப்படித்தான் இருக்கிறது. இது முறைகேடு என்கிறேன். அனுமதியுங்கள், அனுமதியுங்கள் என்று திருமதி பொன்னம்மாள் சொல்கிறார் என்றால் அதனுடைய பொருள் என்ன? முறைகேட்டை அனுமதியுங்கள் என்று கேட்கிறீர்கள். முறைகேட்டை அனுமதிக்கிற பேரவைத் தலைவர் நான் அல்ல. (குறுக்கீடுகள்) நான் இது முறைகேடு

என்கிறேன், முறைகேட்டை அனுமதியுங்கள், அனுமதியுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருந்தால் நான் முறைகேட்டை அனுமதிக்கிற பேரவைத் தலைவர் இல்லை. (குறுக்கீடுகள்) நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) முறைகேட்டை நான் அனுமதிக்கவில்லை. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

(திரு. இரா. அப்பு நடேசன், திரு. ஆர். சிங்காரம், திரு. கே. கே. சின்னப்பன், திரு. கே. செல்வராஜ், திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோர் தவிர, காங்கிரஸ் கட்சியின் மற்ற உறுப்பினர்கள் அனைவரும் பேரவையிலிருந்து வெளியேறினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறைகேடாக இங்கே ஒரு பிரச்சினையை எழுப்ப முயன்ற காரணத்தாலே நான் அனுமதிக்கவில்லை. முறைகேட்டை அனுமதிக்க முடியாது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினையைச் சொல்லியிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினை வேண்டாம், (குறுக்கீடு) இப்போது அந்தப் பிரச்சினை வேண்டாம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தை ஒழுங்காக நடத்துவதற்கு என்று சட்ட விதிகளை வகுத்து, அது நீண்ட பெருங்காலமாகவே நடைமுறையில் இருந்து வருகின்றது. தாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறீர்கள், விதிமுறைகளுக்கு அடங்க வேண்டும், விதிமுறைகள்படி நடக்க வேண்டும் என்று. இங்கே ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்றால் முன்கூட்டி வந்து, அதற்கான அனுமதியைப் பெற்று, அனுமதித்ததற்குப் பிறகு, அனுமதி தந்ததற்குப் பிறகுதான் எழுப்ப வேண்டுமென்று விதி முறை இருக்கிறது. அதைத் தாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லியும்கூட, அவர்கள் கேட்கவில்லை, தாங்கள் பேசுகின்றபொழுது அவர்கள் உட்கார வேண்டும். உட்காராமல் வேண்டுமென்றே அவர்கள் திட்டமிட்டு, குழப்பம் செய்ய வேண்டுமென்று எண்ணியுள்ளார்கள். இது நாள்தோறும் நடக்கிறது. இதனை ஒரு, மண்டகப்படியாகவே நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் தினமும் வந்து அந்த மண்டகப்படியை நடத்திக்கொண்டு இருக்கிறார்களே தவிர, (சிரிப்பு) ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்து, ஜனநாயகக் கடமைகளை ஆற்ற வேண்டும், பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு இல்லை. இங்கு வருவதும், கூச்சல் போடுவதும், விதிகளுக்கு

அடங்காமல் இருப்பதும், பிறகு வெளிநடப்புச் செய்வதும் ஆகிய பணிகளிலே தொடர்ந்து ஈடுபட்டிருப்பதனால், இந்த அவை மேற்கொள்ள வேண்டிய கடமைகளைச் சரிவர மேற்கொள்ள இயலவில்லை.

அதற்கு நிலையான ஒரு வழியை ஏற்படுத்துவதுதான் முறையாகும். இனியாவது நல்ல நிலைமை ஏற்படுகின்ற தன்மையில் தாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலையான ஒரு வழியை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் பேரவையிலே பலமுறை அறிவித்திருக்கிறேன். என்ன பிரச்சினையை நீங்கள் ஜீரோ அவரிலே வந்து எழுப்ப வேண்டுமானாலும், பேரவை கூடுவதற்கு முன்னர் என்னுடைய அறையிலே வந்து தெரிவியுங்கள், நான் அனுமதிக்க முடியாத கட்டத்திலேகூட, வேறு விதமாகக்கூட அதை எழுப்புவதற்கு சிலவற்றை—விதி 56-ல் எழுப்ப வேண்டுமென்று என்னுடைய அறையிலே வந்து கேட்கிறார்கள், இது விதி 56-லே எழுப்ப முடியாத பிரச்சினை என்று சொல்லி—ஸ்பெஷல் மென்ஷனாக விடுகிறேன், இன்னும் சில பிரச்சினைகள், எந்த அமைச்சரும் பதில் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கக்கூடிய சில பிரச்சினைகளைச் சொல்வார்கள், அதைக்கூட அவர்கள் எழுப்பியதற்குப் பிறகு, இந்த உறுப்பினர்களுடைய உணர்வுகளை அரசினர் கவனித்து இருக்கிறார்கள், உரிய நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். இதுதான் ஜனநாயக முறை. பாராளுமன்றத்திலே இந்த முறைதான் கடைபிடிக்கப்படுகிறது. அந்த முறையை மீறி நடக்கிற காரணத்தாலேதான் திரும்ப திரும்பச் சொன்னேன். முறைகேடாக நடக்கிறீர்கள், முறைகேடாக நடக்கிறீர்கள் என்று. முறைகேடாக நடக்கிறீர்கள் என்று நான் சொன்ன உடனேயே பொன்னம்மாள் எழுந்து அனுமதியுங்கள் என்று சொல்கிறார். பொருள், முறைகேட்டை அனுமதியுங்கள் என்று. இன்னொரு உறுப்பினரை நான் திரும்பத் திரும்ப எச்சரிக்கிறேன். ஆனால் என்னுடைய இருக்கைக்குக் கீழே வந்து உட்காருகிறார். முறைகேடு என்பது இதுதானே. இத்தகைய முறைகேடுகளை எல்லாம் தடுப்பதற்காகத்தான் என்னிடத்தில் பேரவை விதிகளைக் கொடுத்து அதிகாரம் கொடுத்திருக்கிறீர்கள்.

பேரவை விதி 120 என்பது எனக்குக் கொடுத்திருக்கிற அந்த அதிகாரம். முறைகேடாக ஒரு உறுப்பினர் நடந்து கொள்கிறார் என்றால், அவரை அவையைவிட்டு நான் வெளியேற்றலாம். அப்படி இரண்டு முறை ஒருவர் வெளியேற்றப்பட்டிருந்தால் எஞ்சிய கூட்டத்தொடர் வரையிலேயும் அவர் வெளியேற்றப்படலாம் என்று இருக்கிறது. ஆனால், இந்த விதிமுறை பூராவுமே இப்போது கூடாது என்கிற அளவுக்குப் பிரதான

எதிர்க்கட்சியினர் வந்துவிட்டார்கள். அதுதான் இப்போது இருக்கிற வேதனை. இந்த விதிமுறைகளை எல்லாம் வகுத்துக் கொடுத்திருக்கிற, இந்தப் பேரவைக்கு இருக்கிற இறையாண்மையை நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிற, இறையாண்மை உண்டு என்பதைத் திட்டவட்டமாக அரசியல் சட்டத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிற அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய ஆத்மாவோ, பண்டித நேரு அவர்களின் ஆத்மாவோ இவர்களை மன்னிக்காது என்று அதனாலேதான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஒட்டுமொத்தமாக இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் பேரவையே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, இப்படிப்பட்ட முறைகேடான உறுப்பினர்கள் பேரவைக்கு வரக்கூடாது, எஞ்சய கூட்டத்தொடர் காலத்திற்கு அவர்கள் விலக்கி வைக்கப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுப்பீர்களேயானால் ஜனநாயகத்தின் குரல் இங்கே ஒழுங்காக ஒலித்துக்கொண்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். பேசுகின்ற உறுப்பினர்களாவது நல்ல முறையிலே பேசுவார்கள். இவர்கள் திட்டமிட்டு, இந்த அவையில் ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று, இந்தப் பேரவை கூட்டத் தொடர் தொடங்கிய நாளிலிருந்து வெளியிலே தவறான செய்திகளைப் பரப்புவதற்காகவே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11.25

திரு. செல்வராஜ் அவர்கள்கூட அதைப்பற்றி ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று கேட்டார். அதையும்கூட சொல்லி விடுகிறேன். நாங்கள் பேரவையைப் புறக்கணித்திருக்கிறோம் என்று பேரவையின் கூட்டத்தொடர் எஞ்சிய நாட்களுக்கும் விலக்கி வைக்கப்பட்டிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகையாளர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அவர் விலக்கி வைக்கப்பட்டிருக்கிற முறைகேடான ஒருவர் என்ற காரணத்தாலேதான் நேற்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 45 உறுப்பினர்கள் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதற்காக கையொப்பம் இட்டிருக்கிறார்கள். இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் தவிர என்று எடுத்துக்கொண்டாலும் 36 பேர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதிலேயிருந்து, புறக்கணிப்பு என்று அந்த எதிர்க் கட்சித் தலைவர், எஞ்சிய கூட்டத்தொடர் காலத்திற்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், இந்தப் பேரவையின் அலுவல்கள் பற்றிக் கூறுவதற்கு எந்த உரிமையும் இல்லாத எதிர்க்கட்சித் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற காரணத்தாலேதான் அவர்க்ள் கட்சியினரே 36 பேர் நேற்றையதினம் 'நாங்கள் வருகை தந்தோம்'

என்பதற்குரிய அட்டென்டன்சில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். பேரவை நடவடிக்கைகளில் ஓர் உறுப்பினர் கலந்துகொண்டார் என்பதற்கு நாம் எடுத்துக்கொள்கிற ஒரே வழி அதுதான் — அவர் கையொப்பம் இட்டிருக்கிறார் என்பதுதான். அவர்கள் கையொப்பம் இட்டிருப்பதில் இருந்தே அவருடைய இத்தகைய நடவடிக்கையை அவர்கள் உறுப்பினர்களே ஒத்துக்கொள்ளவில்லை என்பதுதான் உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இங்கே வருகையும் தந்துவிட்டு, புறக்கணித்தோம் என்று வெளியிலேயும் சொல்வது தவறான செய்திகளை நாட்டுக்குப் பரப்புவதற்கு அவர்கள் திட்டமிட்டு இத்தகைய நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று மீண்டும் பேரவையில் அறிவித்துக் கொள்கிறேன். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையில், இந்த அவையை அவர் அவமதித்து இருப்பதற்கான அவை உரிமை மீறல் நோட்டீஸ் எனக்கு வந்திருக்கிறது. அதை சட்ட விதிகளுக்கு எல்லாம் உட்பட்டு நான் ஆய்ந்து கொண்டிருக்கிறேன். அது பற்றி என்ன முடிவெடுப்பது என்று அறிவிக்கிறவரையிலும் அது பற்றிய பிரச்சினை வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் வெளியிலே சென்று, இந்த அவையை அவமதிக்கிற வகையில் உரிமை மீறல் பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கிறார் என்று கூறி, அதை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று என்னிடத்தில் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அது எந்த அடிப்படையில் வருகிறது என்பதை முழுமையாக ஆய்ந்ததற்குப் பிறகு பேரவைக்கு அறிவிக்கிறேன். திரு. செல்வராஜ்.

* *திரு. கே. செல்வராஜ்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி தொடர்ந்து இதேபோல் அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற விதத்தில் விதிகளை மீறிச் செயல்படும் இவர்களால் மற்ற உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதிக்கின்ற நிலை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நிச்சயமாக இவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அதற்கான தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நாள் பொறுக்கலாம். நாளை என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். இன்று போய் நாளை வரட்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமும் இதேபோன்று நம்முடைய அலுவல் நேரங்களைக் குறைத்து, தினமும் மதியம் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் 3, 4 மணிக்கு சாப்பிடுகின்ற நிலை இருக்கிறது. எனவே உறுப்பினர்களுடைய நிலையைப் புரிந்து, நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி பேசி தீர்க்கின்ற வகையிலே, நாளைய தினம் இதற்கு முடிவு கட்டலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்காக நடந்து கொண்டால் பிரச்சினை இல்லை. நாளைய தினம் முடிவே கட்டுவதில்லை. இன்று போய் நாளை வரட்டும் என்றுதான் சொன்னார். நடவடிக்கைக்கு உட்பட்ட உறுப்பினர்கள் தவிர மற்றவர்கள் நாளைக்கு வரலாம், தாராளமாகக் கலந்துகொள்ளலாம், பேசலாம். நாளை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விருப்பம் யாருக்கும் இல்லை.

திரு. கே. கே. சின்னப்பன்: இதே நிலைமை இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலைமை இருக்கக்கூடாதென்றால் உங்களுடைய நண்பர்களுக்கு—வெளியிலே போயிருக்கிறார்கள்—அவர்களிடம் போய் சொல்லுங்கள்.

4. விதி 110-ன் கீழ் அறிக்கை

எல்.டி.டி.ஈ.-ஐப் பற்றி திரு. சுப்பிரமணியன் சுவாமி குறிப்பிடும்போது தெரிவித்த சொல் குறித்து காவல்துறையினர் தொடர்ந்துள்ள வழக்கில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்ற அரசு முடிவு குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிவிப்பினை இப்போது வெளியிடுவார்கள்.